# DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 81/2021 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1 |
| | | Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பானுப்பிரியா | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | செல்லமுத்து | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 15.06.2022.

**முதல் விசாரணை:**

நான் தாராபுரத்தில் வசித்து வருகிறேன். நான் ரங்கநாதன் கல்லூரியில் நர்சிங் படித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எதிரியும். சம்பவத்திற்கு 3 மாதங்களுக்கு முன்பு ரேவதி என்பவர் எனக்கு பழக்கமானார். அவர் என்னை சரண்யாவிடம் கொண்டுவிட்டார். 28.09.2021 அன்று உடுமலையில் வெற்றிவேல் நகரில் உள்ள க/எண்.78 என்ற முகவரியில் இருந்த வீட்டில் கருப்புசாமி, சரண்யா, ரேவதி, தினையரசன் ஆகியோர் இருந்தார்கள். அப்போது எனக்கு பணக் கஷ்டமாக இருந்ததால் வேலை இருக்கிறது என்று கூறி சொன்னதன் பேரில் அங்கு போனபோது தினையரன் இடம் இருந்து ரூ.500/- வாங்கிக்கொண்டு ரூ.300/-யை சரண்யா வைத்துக்கொண்டு ரூ.200/- ரேவதி மூலம் எனக்கு கொடுத்தார்.

2. உடனே என்னை அங்கிருந்த ஒரு அறையில் தினையரசன் உடன் ரேவதியும் சரண்யாவும் அனுப்பி வைத்தார்கள் அப்போது உடுமலை அனைத்து மகளிர் காவல் நிலைய போலிசார் அங்கு வந்தார்கள். அப்போது நடந்த விவரத்தை சொன்னேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை

விசாரணை செய்தார்கள்.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. 1வது எதிரியை எனக்கு சம்பவத்திற்கு முன்பு தெரியாது. ரேவதி என்பவர் என்ன தொழில் செய்து வருகிறார் என்று தெரியாது. ஆனால் அவர் எனக்கு பழக்கம். நான் இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பு வரை மேற்படி செயலில் ஈடுபட்டதில்லை. இந்த வழக்கு சம்பவத்திற்கு யாரும் என்னை கூட்டி வந்து பாலியல் தொழிலில் ஈடுபட கட்டாயப்படுத்தவில்லை என்றால் எனக்கு பணக் கஷ்டமாக இருந்தது அதனால் ரேவதி என்னை கூட்டி வந்தார்.

2. என்னுடைய விருப்பத்தின் பேரில் தான் மேற்படி செயலில் ஈடுபட்டேன் என்றால் பாலியல் தொழிலுக்கு என்னை அழைத்துபோகிறார் என்பது எனக்கு தெரியாது. வெற்றிவேல் நகரில் உள்ள சரண்யா வீட்டிற்கு போனபிறகுதான் தெரியவந்தது. கதவு எண்ணை சம்பவத்தன்று செல்லும்போதே பார்த்தேன். நான் பணத்தை பெற்றுக்கொண்டு அறைக்குள் செல்வதற்கு முன்பாக போலிசார் வந்தார்கள். சம்பவத்தன்று நான் தினையரசன் உடன் தனி அறையில் இல்லை என்று சொன்னால் சரிதான்.

3. போலிசார் விசாரணையிலும் எனது முதல் விசாரணையில் கூறியததைத்தான் கூறினேன். புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல நான் தற்போது நர்சிங் படித்துக்கொண்டு இருப்பதால் அதை விட்டுவிட்டு வந்து சாட்சி சொல்வது பொய் அல்ல. நான் போலிசார் விசாரணையில் போலிசார் வரும்போது அறைக்கு முன்பு ரேவதியிடம் இருந்து பணம் ரூ.200/- வாங்குவதற்காக நின்று கொண்டிருந்தேன் என்று கூறினேன் என்றால் சரிதான் எதிரிக்கு இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**2.வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிக்கு இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.